# ஆற்காடு நகராட்சி

மன்றக் கூட்டப் பொருள்

**30.06 .2021-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

**பொருள் எண்.**01) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜூன்-2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்.89, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.**02) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூன்-2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்.90, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 03) மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராணிப்பேட்டை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/451/2020 நாள்.26.02.2021-ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2017-18ல் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் கீழ்கண்ட பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் | தற்போது திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.30 ஏரிக்கரைத் தெருவில் பூங்கா அமைத்தல் பணி | 7.00 | வார்டு எண்.6 கிருஷ்ணர் தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக், மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் | 9.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைத்தல் பணி | |

**தீர்மான எண்.91, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 04) உங்கள் **தொகுதியில்** முதல்வர் மனு TN/RDPR/RPT/P/UTM/13May21/328886 நாள்.28.05-2021ன் படி இந்நகராட்சிக் குட்பட்ட வார்டு எண்.16, நாவலர் நெடுஞ்செழியன் தெருவில் உள்ள பழைய சிறுபாலம் (ம) சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட பகுதியில் பொதுமக்களின் நலன்கருதி புதிதாக சிமெண்ட் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.92, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 05) இந்நகராட்சியின் அலுவலக கட்டிடத்திலுள்ள மின் பளுதூக்கி (Lift) பழுதடைந்துள்ளதால் அலுவலகத்திற்கு வருகைதரும் பொதுமக்கள், பெரியவர்கள் (ம) மாற்று திறனாளிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாவதால் உடனடியாக மேற்கண்ட Lift இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்திடவும் பணி மேற்கொள்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.1.14 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.93, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்**. 06) இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.8, ஜெயம் நகரில் அமைந்துள்ள MCC-ல் உள்ள மின் இணைப்பினை 1 Single Phase-ல் இருந்து 3Phase ஆக மாற்றி கொள்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.25,939/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ரூ.25,939/- மின்வாரியத்திற்கு செலுத்த நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.94, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 07) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10381/2021/டிபி3 நாள்.03.06.2021ல் நகரட்சிகளின் பராமரிப்பில் உள்ள இடங்களில் திரைப்பட படப்பிப்பு (Movie Shooting) நடத்துவதற்கு அனுமதி அளிப்பது குறித்து தடையில்லா சான்று கோரி https://tnurbanepay.tn.gov.in-ல் விண்ணப்பம் செய்யவும், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபத்தினை பரிசீலனை செய்து https://tnurbanepay.tn.gov.in இணையதளம் வழியாக தடையில்லா சான்று வழங்குவதற்கும், கட்டணம் வசூல் செய்வதற்கும் இணையதளத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் திரைப்பட படப்பிடிப்பு நடத்துவதற்கு அனுமதி அளிப்பது குறித்து அரசிதழ் எண்.48 நாள்.27.01.2021ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.17 தொழில் வளர்ச்சித்துறை நாள்.27.01.2021ல் வரிசை எண்.2, 5, 48ல் கால அளவு 7 நாட்கள் என நிர்ணயம் செய்து பிரசுரம் செய்யப்பட்டுள்ளதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் திரைப்பட படப்பிடிப்பு நடத்துவதற்கு குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் புகார்களுக்கு இடம் அளிக்கா வண்ணம் நடவடிக்கை எடுத்து உரிய கட்டணங்களை வசூலித்த பின் தடையின்மை சான்று வழங்குவது குறித்து இறுதி உத்திரவு வழங்க்கபடவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் திரைப்பட படபிடிப்பு நடத்துவதற்கு ஆய்வு

கட்டணம் ரூ.500/- மற்றும் i) நாள் ஒன்றுக்கு நகராட்சி / அரசு **நிலங்களில்** /தெருக்களில் ரூ.5000/- ii) தனியார் இடங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.3000/- நிர்ணயம் செய்து வசூல் செய்திட மன்ற ஒப்புதலுக்குகாக வைக்கப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0961/2021/எப்1

**தீர்மான எண்.95, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 08) இந்நகராட்சியில் 2020-2021ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.1.14 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக கட்டிடத்திலுள்ள Lift இயந்திரத்தில் பழுதடைந்துள்ள பாகங்களை புதிதாக மாற்றி பழுது பராமரிப்பு பணிக்கும் 25.06.2021ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் திருவாளர்கள் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | National Elevators, Vellore | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | KPS Elevators | 6.51% மதிப்பீட்டைவிட அதிகம் |

அ.கு.:- மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. National Elevators, Vellore ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதத்தில் உள்ளதை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்க ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.96, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 9) இந்நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனம்-5, நாளங்காடி வாளகத்திற்குள் உள்ள கடைகள், ஷெட்டுகள் போட்டிருக்கும் காலியிடங்கள் மற்றும் விற்பனைக்கு வரும் எல்லா தலைச்சுமைகள், சுமை வண்டிகள், தள்ளு வண்டிகள், காய்மேடை விற்பனை, அரிசிகடை, மீன்மார்க்கெட்டில் உள்ள கடைகள் மற்றும் இதர காலியிடங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமையினை 2018-2021ம்

ஆண்டுகளுக்கு திரு.எஸ்.ஜானகிராமன் என்பவர் குத்தகை எடுத்து அனுபவித்து வந்தார். அவரின் குத்தகை காலம் 31.03.2021 உடன் முடிவடைகிறது.

மேற்படி மூன்றாண்டு குத்தகை இனத்தினை அதில் உட்புறம் அடங்கியுள்ள 142 கடைகளை தனித்தனியாக மாத வாடகைக்கு விடவும், மீதமுள்ள தலைச்சுமைகள், சுமைவண்டிகள், காய்மேடை விற்பனை ஆகியவற்றை மூன்றாண்டு குத்தகை இனமாக இரண்டாக பிரித்து நகரட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் பொது ஏலம்விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகராட்சியின் இச்செயல்பாட்டை எதிர்த்து, குத்தகைதாரரான திரு.எஸ்.ஜானகிராமன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.3086/2021, நாள் 10.02.2021 மற்றும் W.P.No.3473/2021 நாள் 19.02.2021ல் வழக்கு தொடர்ந்துள்ளார். தேர்தல் நன்னடைத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி 01.04.2021 முதல் 30.06.2021 வரையிலான காலத்திற்கு முந்தைய குத்தகைதாரரான திரு.எஸ்.ஜானகிராமன் என்பவருக்கு குத்தகையினை அனுபவிக்கும் உரிமயினை நீட்டிப்பு செய்ய உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி இனம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பொது ஏலம் கோர இயலாது என்பதால் மேற்படி குத்தகை இனத்தினை 01.07.2021 முதல் துறை மூலம் வசூலிக்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும், 01.07.2021 முதல் கடைகள் மற்றும் வாகனங்குளுக்குண்டான தினசரி சுங்கக் கட்டணம் துறை மூலம் வசூலிக்க கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து மன்றஅனுமதி கோரி வைக்கப்படுகிறது.

**<u>01.07.2021 முதல் தினசரி சுங்க கட்டணம் வசூல்</u>**

| | | |
|---|---|---|
| 1 | நாளங்காடி வளாகத்திற்குள் உள்ள 142 டைகளுக்கு | ரூ.120.00 |
| 2 | காலியிட கடைகள் | ரூ.60.00 |
| 3 | காய்மேடை கடைகள் | ரூ.20.00 |
| 4 | சரக்கு ஏற்ற/இறக்க வரும் லாரி (ஒரு முறைக்கு) | ரூ.100.00 |
| 5 | சரக்கு ஏற்ற/இறக்க வரும் வேன் மற்றும் ஆட்டோ (ஒரு முறைக்கு) | ரூ.50.00 |
| 6 | தலைச்சுமையாக கொண்டு வரும் மூட்டை மற்றும் கூடை ஒன்றுக்கு | ரூ.15.00 |

**அலுவலக குறிப்பு :-**

1) மேற்படி குத்தகை இனத்தினை 01.07.2021 முதல் வழக்கு முடியும் வரை துறை மூலம்
வசூலிக்கலாம். வழக்கின் தீர்ப்பின்பேரில் மேல் நடவடிக்கை தொடரலாம்.

2) பொது மக்கள் அறிந்துகொள்ளவும், கட்டணங்கள் வசூலிக்க ஏதுவாகவும் தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்யலாம்.
3) நாளங்காடியில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினச சுங்கக் கட்டணங்களை அரசு செய்தித்தாளில் விளம்பரம் செய்யலாம்.
4) விளம்பர செலவினம் மற்றும் இரசீது புத்தகம் அச்சடிக்கும் செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.2014/2020/அ4)

**தீர்மான எண்.97, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10)** இந்நகராட்சியின் பொதுச் சுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் பயன்பாட்டில் உள்ள இலகு ரக வாகனம் TN73AC6529. TN73AC6482, TN73AC3454, TN73AC3449 மற்றும் TN736459 வாகனங்களுக்கு டயர் மற்றும் டியூப்கள் பழுதடைந்துள்ளதால் இதனை புதியதாக 155 D12 என்ற எண்ணுள்ள 12 டயர்கள் டியூப்கள் மாற்ற 14.06.2021ஆம் நாளில் உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதற்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மற்றும் இதற்கான தோராயச் செலவினத் தொகை ரூ-40000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது-

| வ.எண் | விவரம் | ஒரு டயர் மற்றும் டியூபின் விலை ரூ. |
|---|---|---|
| 1 | Shree Vari Tyres, Arcot | 3100.00 |
| 2 | Rekha Vari Tyres, Arcot | 3200.00 |
| 3 | Girish Tyres, Arcot | 3400.00 |

**அ.கு.**:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) பொதுசுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனங்களில் டயர் மற்றும் டியூப்கள் பழுதடைந்துள்ளதால் இதனை புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று வாங்க

மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்றமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்க வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.0849/2021/எச்1

**தீர்மான எண்.98, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 11) இந்நகராட்சியில் தெரு மின்விளக்கு பராமரிப்புக்கு தேவையான உதிரி மின் பொருட்களின் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி தற்போது தெருமின் விளக்கு பராமரிப்புக்கு தேவையான உதிரி மின் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீட்டு செலவின தொகை ரூ.6.76 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**:- 1) மன்றம் அனுமக்கலாம்.

2) இப்பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.99, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 12) இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் மக்கும்/மக்கா குப்பைகளை மூன்று நுண்ணுர மையங்களில் பிரித்து மக்கம் குப்பைகளை உரம் தயாரிக்கும் பணியில் 18 ஆண்கள் சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு ஈடுபட்டு வருவதில் 31.05.2021ஆம் நாளில் நிர்வாக அனுமதி முடிவடைவதால், இதனை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரையிலான நாட்களுக்கு 2019-2020 வருடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறையில் தெரிவித்துள்ள வ.எண்.1 Unskilled Labour -320/-ஐ நிர்ணயம் செய்து தினக்கூலியாக வழங்க தோராயச்செலவினத் தொகை ரூ.5.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**.:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சில் உள்ள மூன்று நுண்ணுயிர் மையங்களில் செயலாக்கப் பணிக்கு 18 ஆண்கள் சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு மேலும் மூன்று மாதங்களுக்கு பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளித்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) நுண்ணுயிர் மைய 18 பணியாளர்களுக்கு மாத ஊதியத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**.589/2020/**எச்**1

**தீர்மான எண்.100, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 13) இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் நான்கு மகளிர் குழு 52 பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதில் 31.05.2021ம் நாளுடன் முடிவடைகிறது. இப்பணியினை மேலும், மூன்று மாதங்களுக்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரையிலான நாட்களுக்கு அதே தின கூலி ரூ.277/-ஐ அடிப்படையில் நீடித்து வழங்க தோராயச் செலவினத் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**.:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணித் தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டு வருவதால் அதே தினக்கூலியின் அடிப்படையில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடித்து 52 மகளிர் குழு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மன்றப்பொருள் எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்படி செலவினத் தொகையினை வருவாய் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**ந.க.எண்**.2600/2015/**எச்**1

**தீர்மான எண்.101, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.** 14) ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகளுக்கு

வெளி முகவர் (Out Sourcing) மூலம் 136 தூய்மைப் பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகளின் ஆணை கே.டிஸ்க். எண்.30813/ஜே3/2018 நாள்.11.12.2018 ஆம் நாளின் செயல்முறைகளில் மூன்றாண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், அவ்வப்போது நிரந்தரத் தூய்மைப் பணியாளர்கள் காலியாகும் இடத்திற்கு ஏற்ப தனியார் தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகளின் ஆணையில் அனுமதி அளித்துள்ளதன்படி 136 தூய்மைப் பணியாளர்களை 10.10.2019ம் நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் தொழிற்சார்ந்த குறிய்யீட்டில் ஒரே ஒப்பந்ததாரர் மட்டுமே தகுதியானதால், மன்றப்பொருள் எண்.285 நாள்.31.10.2019ஆம் நாளில் நிர்வாக நலன் கருதி ரத்து செய்யப்பட்டது. மேலும, 10.03.2021 ஆம் நாளில் கோரப்பட்ட இரண்டாம் ஒப்பந்தப்புள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை காரணங்களால் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்ததால் நிர்வாக காரணங்களால் ரத்து செய்யப்பட்டது. எனவே, இவ் ஒப்பந்தப்புள்ளியின் பொது சுகாதார நலன் கருதி இதனை தொடர்ந்து மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய மேல்நடவடிக்கை எடுக்க, வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, 2019-2020 வருடத்தின் (வ.எண்.63) தூய்மைப் பணியாளருக்கு தினக்கூலியாக ரூ-335/- ஆகவும், இதன் அடிப்படையில் தொழிளாலர் வருங்கால வைப்பு நிதி (13.61%) ரூ.45.59, தொழிலாளர் நல மருத்துவக் காப்பீடு (3.25%) ரூ.10.88 இத்துடன் தனியார் நிறுவனத்தின் நிர்வாகச் செலவினம் (5%) ரூ.16.75 ஆகும். எனவே, ஒரு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ஆகும் ஊதியத் தொகை ரூ-408.22 ஆக உள்ளது. மேலும், ஒரு தூய்மைப் பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரனங்கள் ரூ.1500/- ஆக 136 பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.204000/-ஐ சேர்த்து ஒரு வருடத்திற்குண்டான மொத்தம் தோராயச் செலவினத் தொகை ரூ.2.05 கோடி (இரண்டு கோடியே ஐந்து இலட்சம்) ஆகும். எனவே, இப்பணியினை மேலும் மூன்றாம் ஒப்பந்தப்புள்ளியினை கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மாநில அளவில் செய்தித்தாள்களில் விளம்பரம்

செய்வதற்கு ஆகும் தோராயச் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl.No | Name of the items | Rate |
|---|---|---|
| 1 | Vellore Collector 2019-2020 Approved rate for Sanitary worker (Roc.No.E2/8687/2019, dated 06/05/2019 Sl.No.63) | 335.00 |
| 2 | Employee Provident Fund 13.61% | 45.59 |
| 3 | Employee State Insurance 3.25% | 10.88 |
| 4 | Administrative Expenditure @ 5% | 16.75 |
| | **Total** | **408.22** |

| | | |
|---|---|---|
| 1 | The Rate of one Sanitary worker per day Rs. | 408.22 |
| 2 | 136 sanitary workers per day wages Rs | 55517.92 |
| 3 | 136 Sanitary workers per month (30 days) wages Rs | 1665537.60 |
| 4 | 136 sanitary workers 365 days Rs. | 20264040.00 |
| 5 | One sanitary worker per year uniform and safety Equipments Rs.1500/- (136 X 1500) | 204000.00 |
| 6 | 136 sanitary workers per year expenses | 20468040.80 |

அ.கு.:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகளுக்கு இணங்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 136 தனியார் தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இரண்டாம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ரத்துசெய்யப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதியும் மற்றும் ரத்து செய்யப்பட்டதற்கான செய்திதாள் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு செலவினத் தொகை ரூ.25000/-க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

4) தனியார் தூய்மைப் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி ஊதியம் வழங்க ஓர் ஆண்டிற்குண்டான செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மேற்காணும் ஒப்பந்தப்புள்ளியினை மாநில அளவில் செய்தி தாளில் விளம்பரம் செய்ய செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2626/எச்1/2018

**தீர்மான எண்.102, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15)** இந்நகராட்சி மூன்றாண்டு குத்தகை இனம் -5, நாளங்காடி வாளகத்திற்குள் உள்ள கடைகள், ஷெட்டுகள் போட்டிருக்கும் காலியிடங்கள், மற்றும் விற்பனைக்கு வரும் எல்ல தலைச்சுமைகள், சுமை வண்டிகள், தள்ளு வண்டிகள், காய்மேடை விற்பனை, அரிசிகடை, மீன்மார்க்கெட்டில் உள்ள கடைகள் மற்றும் இதர காலியிடங்களுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமையினை 2018-2021ம் ஆண்டுகளுக்கு திரு.எஸ்.ஜானகிராமன் என்பவர் குத்தகை எடுத்து அனுபவித்து வந்தார். அவரின் குத்தகை காலம் 31.03.2021 உடன் முடிவடைந்தது.

மேற்படி மூன்றாண்டு குத்தகை இனத்தினை அதில் உட்புறம் அடங்கியுள்ள 142 கடைகளை தனித்தனியாக மாத வாடகைக்கு விடவும், மீதமுள்ள தலைச்சுமைகள், சுமைவண்டிகள், காய்மேடை விற்பனை, ஆகியவற்றை மூன்றாண்டு குத்தகை இனமாக இரண்டாக பிரித்து நகரட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் பொது ஏலம்விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நகராட்சியின் இச்செயல்பாட்டை எதிர்த்து, குத்தகைதாரரான திரு.எஸ்.ஜானகிராமன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. 3086/2021 நாள்.10.02.2021 ல் மற்றும் W.P.No. 3473/2021 நாள். 19.02.2021ல் வழக்கு தொடர்ந்தார் தேர்தல் நன்னடைத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி 01.04.2021 முதல் 30.06.2021 வரையிலான காலத்திற்கு முந்தைய குத்தகைதாரரான திரு.எஸ்.ஜானகிராமன் என்பவருக்கு குத்தகையினை அனுபவிக்கும் உரிமயினை நீட்டிப்பு செய்து திரு.எஸ்.ஜானகிராமன் குத்தகையை அனுபவித்து வந்தார்.

தமிழக அரசால் தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் எடுக்க இயலாத நிலை ஏற்பட்ட நிகழ்வாலும், மேற்படி குத்தகை இனம் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பொது ஏலம் கோர இயலாத நிலையில் இவ்குத்தகை இனத்தை இவ்வலுவலக ந.க.எண்.2014/2020/அ4 நாள்.02.062021 நகராசி நிர்வாக

மண்டல இயக்குநர், வேலூர் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிவுரை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிவாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.1910/2021/அ3 நாள்.10.06.2021ல் இப்பொருள் குறித்து நகராட்சி ஆணையர் அவர்களே முடிவுசெய்து கொள்ளலாம் என அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி 01.07.2021 முதல் கீழ்கண்டவாறு நடவடிக்கை எடுக்க துறை மூலம் வசூல் செய்ய கட்டணம் நிர்ணயம் செய்து தனி அலுவலரின் முன் அனுமதி நாள்.10.06.2021ல் பெற்று தினசரி நாளிதழில் பின்வருமாறு தினசரி சுங்க கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது.

<u>01.07-2021 முதல் தினசரி சுங்க கட்டணம் வசூல்</u>

| | | |
|---|---|---|
| 1 | நாளங்காடி வளாகத்திற்குள் உள்ள 142 க டைகளுக்கு | ரூ.120.00 |
| 2 | காலியிட கடைகள் | ரூ.60.00 |
| 3 | காய்மேடை கடைகள் | ரூ.20.00 |
| 4 | சரக்கு ஏற்ற / இறக்க வரும் லாரி (ஒரு முறைக்கு) | ரூ.100.00 |
| 5 | சரக்கு ஏற்ற / இறக்க வரும் வேன் மற்றும் ஆட்டோ (ஒரு முறைக்கு) | ரூ.50.00 |
| 6 | தலைச்சுமையாக கொண்டு வரும் மூட்டை மற்றும் கூடை ஒன்றுக்கு | ரூ.15.00 |

மேற்கண்ட கட்டண விவரம் தினமணி நாளிதழில் 29.06.2021 அன்று வெளியிடப்பட்டதால் பொதுமக்கள் மற்றும் தினசரி நாளங்காடியில் காய்கறி வியாபராம் செய்பவர்கள் கட்டண உயர்விற்கு அதிருப்த்தி தெரிவித்து ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களை நேரில் சந்தித்து இக்கட்டணம் உயர்வை 2018-2021 மூன்றாண்டு ஏல அறிக்கையின் அடிப்படையில் குறைத்து தருமாறு கேட்கப்பட்டதின் அடிப்படையிலும் இந்நகராட்சியில் 2018-2019 முதல் 2020-21 வரை வெளியிடப்பட்ட மாவட்ட அரசிதழில் பின்வருமாறு கட்டணங்கள் 31.03.2021 வரை நிர்ணயம் செய்யப்பட்டது.

**2018-2021 மூன்றாண்டு குத்தகை சுங்க கட்டண விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | நாளங்காடி வளாகத்திற்குள் உள்ள 142 க டைகளுக்கு (அதிகபட்சம் ) | ரூ.12.00 |
| 2 | காய்மேடை கடைகள் | ரூ.5.00 |
| 3 | சரக்கு ஏற்ற / இறக்க வரும் வேன் மற்றும் | ரூ.18.00 |

| | | |
|---|---|---|
| | ஆட்டோ (ஒரு முறைக்கு) | |
| 4 | தலைச்சுமையாக கொண்டு வரும் மூட்டை மற்றும் கூடை ஒன்றுக்கு | ரூ.9.00 |

மேற்கண்ட கட்டண விவர அடிப்படையிலும் கொரோன தொற்றுநோய் -19 ஏற்பட்ட காரணத்தினாலும் இக்கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்து கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>01.07-2021 முதல் திருத்தியமைக்கப்பட்ட தினசரி சுங்க கட்டணம் வசூல்</u>**

| | | |
|---|---|---|
| 1 | நாளங்காடி வளாகத்திற்குள் உள்ள 142 கடைகளுக்கு | ரூ.30.00 |
| 2 | காய்மேடை கடைகள் | ரூ.20.00 |
| 3 | சரக்கு ஏற்ற / இறக்க வரும் வேன் மற்றும் ஆட்டோ (ஒரு முறைக்கு) | ரூ.20.00 |
| 4 | தலைச்சுமையாக கொண்டு வரும் மூட்டை மற்றும் கூடை ஒன்றுக்கு | ரூ.10.00 |

அ.கு :- 1) தினசரி நாளங்காடி குத்தகை இனத்தினை 01.07.2021 முதல் வழக்கு முடியும் வரை துறை மூலம் வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்

2) வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மேல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) 29.06.2021 அன்று தினசரி சுங்க கட்டணத்தை ரத்துசெய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4) மன்றபொருளில் COVID – 19 ஏற்பட்டதின் விளைவாக பொதுமக்கள் மற்றும் தினசரி நாளங்காடி வியாபரிகள் வாழ்வதாரம் பாதிக்க கூடாது என்ற நிலையில் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதத்தை 01.07.2021 இருந்து நடைமுறைப்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2014/2020/அ4

**தீர்மான எண்.103, அனுமதிக்கப்பட்டது**

ஆற்காடு  
**நாள்: 30.06.2021**

தனி அலுவலர்,  
ஆற்காடு நகராட்சி